முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 991

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

16.06.2022, வியாழக்கிழமை

1. பார்காக்க வந்த வள்ளலே
பரமானந்த சதா சிவ சற்குருவே
சீர்திருத்தம் செய்து கலியுகத்தையே
சித்திமிகு ஞானயுகமாக மாற்ற வந்த அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் ஆனி மாதம் 02 நாள், 16.06.2022 வியாழக்கிழமை)
வரமென அரங்கன் சக்தியாலே
வையகம் நல்மாற்றம் காணக்கூடும்
3. அறமெனும் அரங்கன் தர்மத்தாலே
அகிலமே வறுமை அகன்றோடி
ஓடியே வளமும் சர்வ பாதுகாப்பும்
உயிர் பாதுகாப்பு உலகமெல்லாம் மேண்மை உயர்வாகக் கண்டு தேற நேரும்
4. நேர்மைகொண்டு அரங்கன் தருகின்ற ஞானமே
நிலவுலகை நல்வழி படுத்தும்
பெருமைமிக்க அரங்கன் தர்மமே
பேருலகை வளமாக்கி மகிழ்விக்கும்
5. மகிழ்வுடன் அரங்கன் தருகின்ற உபதேசம்
மக்களை மனபக்குவம் ஏற்படுத்தி ஞானமாக்கும்
ஞானதேசிகன் ஞானமே ஞானவான்களை படைத்து உலகினில்
ஞானயுகமாற்றமும் ஞான ஆட்சிக்காலத்தையும் படைக்கும்
6. ஆகவே அரங்கனுள் யானிருக்கேன்
அப்பனே கலியுக மக்களே
ஒப்புகொண்டு அரங்கன் குடில் வந்து
ஓங்காரக்குடிலில் உயர் சேவையாற்றி
7. உலகை மாற்ற வந்த அரங்கன்
உயர்வான வழிகளை ஏற்றுக்கொண்டு
கொண்டுமே அரங்கன் பால் தீட்சைபெற
குறையிலா அனைவரும் என்னாசிபலம் பெற்று முழுமைகொண்டு
8. முழுமைகண்டு இனிதே உலகோர்
மொழிகுவேன் அழியாமை பெற்று சிறப்பர்
சிறப்பு தரும் அரங்கனே சித்தி தரும் கலியின் ஞானி
மறுப்பின்றி வர அரங்கன் வழி முருகப்பெருமான் என்னருளையும் பெற்று உலகோர் உயர்வர்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–